**நான் என்ன செய்யலாம்?**

உங்களுக்கு மிகவும் கவலையான தருணம் இது என்பதை பொலிஸார் உணர்கின்றனர். உங்களுக்கு பொலிஸாரின் ஆதரவும், விசாரணை குறித்த விபரங்களும் தேவை என்பதை அவர்கள் அறிவார்கள். அதேநேரம், காணாமல்போனவர் குறித்து நீங்கள் முடிந்த அளவுக்கு விசாரணை செய்து பொலிஸாருக்கு உதவுவதற்கான தருணமும் இதுதான். ஒருவர் காணாமல்போனதாக நீங்கள் புகார் கொடுத்திருப்பது இதுதான் முதல்தடவை என்றாலும்கூட, நீங்கள் இந்த விஷயத்தை தயவுசெய்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். விசாரணை செய்வதில் பொலிஸாருக்கு பல ஆண்டுகள் அனுபவம் இருக்கிறது. அவர்கள் மற்ற அமைப்புகளின் உதவியுடன் இந்த விசாரணைக்கு விரைவில் ஒரு முடிவுகாண முயலுவார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

சிலவேளை தான் இருக்கும் இடம் யாருக்கும் தெரியக்கூடாது என காணாமல்போன நபர் நினைக்கலாம். அதைச் செய்வதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அதனை நாம் மதிக்க வேண்டும். அப்படியிருந்தால் நாங்கள் அதனை உங்களிடம் தெரிவிப்போம்.

**உங்களுக்கு கூடுதல் உதவி தேவையென்றால் அதை வழங்கக்கூடிய அமைப்புகளைத் தொடர்புகொள்வதற்கான தொலைபேசி மற்றும் இணையதள விபரங்கள்.**

| |
|---|
| தொடர்பு மையம்<br><br>காவல் நிலையம் |
| தொலைபேசி: |
| குறியீட்டு எண்: |

**காணாமல்போனோர் உதவி**
**தேசிய அழைப்பு மையம்**
**0500 700 700**
www.missing persons.org

**சாமரிடன்ஸ்**
**0845 90 90 90**
www.samaritans.org

**பிரிட்டிஷ் ரெட் கிராஸ்**
**(செஞ்சிலுவைச் சங்கம்)**
**020 7235 54 54**
www.redcross.org.uk/trace

**ரீயுனைட்**
www.reunite.org

# காணாமல்போனோர் புகார் மற்றும் விசாரணை வழிகாட்டி

TAMIL

**காணாமல்போனவர் பற்றி நான் புகார் கொடுத்துவிட்டேன், இனிமேல் என்னாகும்?**

காணாமல்போனவர் பற்றி ஒரு பொலிஸ் அதிகாரி உங்களிடம் இருந்து புகாரைப் பதிவுசெய்துகொண்டவுடன், நீங்கள் தந்த விபரங்கள் அனைத்தையும் அவர் காவல் நிலையத்திலுள்ள ஒரு கணினியில் இடுவார். பின்னர் தேசிய அளவில் பொலிஸ் கணினிகளில் ‘காணாமல்போனோர்’ பட்டியலில் இதுவும் தெரியும். கணினி வலையமைப்புக்குள் இந்த விபரங்கள் வந்துவிட்டபடியால், தேசிய அளவில் அல்லது சர்வதேச அளவில் எந்த பொலிஸ் அதிகாரி வேண்டுமானாலும் எம்மைத் தொடர்புகொண்டு இதுபற்றிய விரிவான தகவல்களைப் பெறலாம்.

காணாமல்போனவரைக் கூடிய விரைவில் கண்டுபிடிக்கும் நோக்கில் ஆரம்ப விசாரணை அதிகாரி உடனடி விசாரணைகளை நடத்துவார்.

உடனடி விசாரணைகளில் காணாமல்போனவர் கிடைக்கவில்லை என்றால், புகார் கொடுக்கப்பட்ட பொலிஸ் நிலையத்திற்குள் ஒரு அதிகாரியிடம் அவர் சம்பந்தமான விசாரணை ஒப்படைக்கப்படும். அதன் பிறகு அது சம்பந்தமான அனைத்து விசாரணைகளையும் அவர்தான் செய்வார்.

**விசாரணை அதிகாரி என்னென்ன செய்யலாம்?**

பலனளிக்கூடிய விசாரணை ஒன்றை நடத்துவதற்கான அனைத்து விபரங்களும் தன்னிடம் இருக்கிறதா என்பதை முதலில் அந்த விசாரணை அதிகாரி உறுதிசெய்வார். அவருக்கு தேவையான விபரங்களில் பின்வருவன அடங்கும்.

- நண்பர்கள் மற்றும் உறவினர்கள்,
- காணாமல்போனவர் அடிக்கடி சென்றுவரக்கூடிய இடங்கள்
- அவருடைய உடல்நலம் மற்றும் அவருக்கு இருக்கக்கூடிய நோய்கள்,
- அவருடைய நிதிநிலை விபரங்கள் (வங்கிக் கணக்கு, கிரெடிட் கார்ட் மற்றும் டெபிட் கார்ட் விபரங்கள்),
- அவர் அரசு உதவி ஏதும் பெற்றுவந்திருக்கிறார் என்றால் அதன் விபரங்கள் மற்றும் அந்த உதவியை எந்த இடத்திற்கு சென்று அவர் வாங்குவார் என்பது பற்றிய விபரம்.
- அண்மையில் எடுத்த புகைப்படங்கள்
- அவர்கள் காணாமல்போனதுடன் தொடர்புபடக்கூடிய நிகழ்வுகள்
- பின்னர் தடயவியல் சோதனைகளை செய்வதற்காக அவரது டி.என்.ஏ. பதிந்திருக்க்கூடிய அவர் பயன்படுத்திய பொருள்.

உங்களது சம்மதத்துடன் அதிகாரிகள் காணாமல்போன நபரின் வீட்டை சோதனையிட்டு வேறு ஏதும் தடயம், துப்பு கிடைக்கிறதா என்று பார்ப்பார்கள். (இது வழக்கமான நடைமுறைதான்.)

விசாரணையினை விஸ்தரிக்க வேண்டும் என்கிற நோக்கில் காணாமல்போனவர் குறித்து விளம்பரம் கொடுப்பதற்கும் பொலிஸார் உங்களது சம்மதத்தை கேட்பார்கள்.